22nd January 1965]

லப்பட்டது. அதில் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? 1965-லேயே இது ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியும், இதில் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஜனவரியில் மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக நிறைவேற்றினாலும் கூட, உடனடியாக யூனிவர்சிடியைப் பரிபூரணமாக அங்கே அமைக்க முடியாது. ஆகையால், ஒன்றிரண்டு மாதங்கள் தாமதமானாலும், சட்டத்தைத் சீக்கிரம் நிறைவேற்றிவிடலாம். உடனடியகப் பூர்வாங்க ஏற்பாடுகளை எடுத்துக்கொள்ளலாம்.

Vice-Chancellors of Universities

* 59. *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to restrict the tenure of office of the Vice-Chancellors of Universities and to make any change in the system of election?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இன்றைக்கிருக்கும் சட்டபடி தொடர்ந்து ஒரே நபர் வைஸ்-சான்ஸலராக இருக்கும் நிலைமை இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்று மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் நம்முடைய அரசாங்கத்திற்கு ஏதாவது யோசனை தெரிவித்திருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் இல்லை'

Atomic Power Plant, Kalpakkam

* 60. *Q.*—PULAVAR K. GOVINDAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the extent of lands acquired in the Kalpakkam area for the establishment of an Atomic Power Plant; and

(*b*) the arrangements made for the rehabilitation of the people evicted from that area?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) கல்பாக்கத்தில் நிறுவ உத்தேசித்துள்ள அணு மின்சார நிலையத்திற்காக இதுவரை நிலம் எதுவும் வாங்கவோ, ஆர்ஜிதம் செய்யப்படவோ இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Thermal Power stations

* 61. *Q.*—SRI M. KARUNANITHI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a Thermal Power Station at Ennore, near Madras; and

(*b*) if so, when this scheme will be implemented?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) In about three years.